செய்தி வெளியிடு எண் :39 நாள் :31.03.2020

## பத்திரிக்கை செய்தி

கொரோனா வைரஸ் நோயை முற்றிலும் தடுக்கும் விதமாக சமூக தனிமைப்படுத்துதலை தீவிரப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் உத்தரவின் பேரில் தேனி மாவட்டத்தில் குற்றவியல் நடைமுறைச்சட்டப்பிரிவு 144-இன் கீழ் ஊரடங்கு உத்தரவு கடந்த 24.03.2020 அன்று மாலை 6.00 மணி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் வீடுகளில் தனிமை நிலையில் உள்ள பொதுமக்களுக்கு கொரோனா வைரஸ் சம்மந்தமாக எழும் சந்தேகங்கள் மற்றும் ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட அனைத்து ஆலோசனைகளும் வழங்க வேண்டியுள்ளது.

தேனி மாவட்ட மக்களுக்கு மேற்கண்டவாறு எழுகின்ற சந்தேகங்களுக்கு முறையான ஆலோசனை வழங்குவதற்கு மாவட்ட மனநல திட்ட ஆலோசகர்கள் மற்றும் தேனி மருத்துவ கல்லூரி மனநல மருத்துவர்கள் பொறுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, ஆலோசனை தேவைப்படும் பொதுமக்கள் 9597961176, 9486009440, 9443690880 மற்றும் 9443345837 என்ற தொடர்பு எண்களை எந்நேரமும் தொடர்பு கொண்டு உரிய ஆலோசனை பெற்றிடலாம் என தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**